**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 57/2021**

பெயர் : நடராஜன் P.W.3 Cross.

த/பெ. : பஞ்சு

தேதி : 23.10.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை: -**

1. எனது சொந்த ஊர் தில்லையாடி ஆகும். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னை நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க யார் அழைத்தார்கள் என்றால் வாதி தான்அழைத்தார். கோவிலுக்கு சொந்தமான ரைஸ்மில் திரௌபதி அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ளது. தாவா சொத்து திரௌபதி அம்மன் கோவிலுக்கு சொந்தமானது என்று எனக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு விபரம் தெரிந்த காலத்திலிருந்தே தெரியும். தாவா சொத்திற்கும் ரங்கராஜனுக்கும் என்ன தொடர்பு என்றால் அவர் அந்த கோயிலின் ஒரு அறங்காவலர் ஆவார். ரங்கராஜன் மேற்படி கோவிலில் அறங்காவலர் என்பதற்கான ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அவர் தான் அந்த கோவிலை நிர்வகித்து வருகிறார்.

2. ரைஸ்மில் உள்ள இடம் தான் கோவிலுக்கு சொந்தமான சொத்தாகும். இந்த வழக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு வருடங்களுக்கு முன்பு அந்த இடத்தில் கட்டிடம் இருந்தது என்றால் 70 வருடங்களுக்கு முன்பு கட்டிடம் இருந்தது. தற்போது தாவா சொத்தில் கட்டிடம் உள்ளதா என்றால் பழைய கட்டிடம் இடித்துவிட்டதால் புதிதாக கட்டிடம் கட்டியுள்ளார்கள். தாவா சொத்து தற்போது யாரிடம் உள்ளது என்றால் ஒரு பெண்மணியிடம் உள்ளது . அவர் பெயர் எனக்கு தெரியாது. கட்டிடம் எப்போது புதிதாக கட்டினார்கள் என்றால் 3 வருடங்களுக்கு முன்பு கட்டினார்கள். யார் கட்டினார்கள் என்றால் தற்போது நிர்வாகம் செய்து வரும் பெண்மணி கட்டினார்.

3. எனக்கு 77 வயது ஆகிறது. அந்த பெண்மணி எத்தனை வருடங்களாக எந்த முறைமையில் தாவா சொத்தை வைத்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு சொந்தமாக 1 ஏக்கர் வயல் உள்ளது. எனது வயல் கோவிலுக்கு அருகாமையில் உள்ளது. கோவில் உள்ள தெருவின் பெயர் ஆற்றங்கரை தெரு. அந்த தெருவில் கோவிலிருந்து 20 வீடுகள் தள்ளி எனது வீடு உள்ளது. எனது மகன் பெயிண்டராக வேலை பாரத்து வருகிறார். அவர் தான் எனது ஜீவனத்திற்காக பணம் கொடுத்து வருகிறார்.

4. எனக்கு தாவா சொத்தை பற்றி எதுவும் தெரியாது என்றாலும், இன்றைய செலவிற்கு வாதி பணம் கொடுத்ததால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.